
REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630




The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

## ரூ. 50 இலட்சம் செலவில் பாலாற்றில் புதிய நீர்த்தேக்க அணைக்கட்டு

வடாற்காடு மாவட்டத்தில் பாலாற்றின் குறுக்கேயுள்ள அணைக்கட்டை, நீர்த்தேக்க அணைக்கட்டாக மாற்றியமைப்பதற்கு ரூ. 50 இலட்சம் செலவாகும் திட்டமொன்றைப் பிரதம எஞ்சினியர் பரிசீலனை செய்துவருகிறாராம்!

காவேரிப்பாக்கம் கால்வாயில், ரூ. 2,10,000 செலவில் 'வண்டல் எடுப்பதும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாம்!

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மேல் (சட்ட) சபையில் மராமத்து அமைச்சர் கக்கன் இதனைத் தெரிவித்தார்.

மலர் 5] சென்னை: ஐப்பசி 22உ வியாழன் (7—11—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 23உ வெள்ளி (8—11—57) [இதழ் 125

# இந்திக்கு எதிராகக் கன்னடியர் எழுப்பும் கண்டன முழக்கம்

## 'வடவரே என்றென்றும் தென்னவரை ஆளுவர்'

## 'இந்திக்கு தேசிய மொழியாகும் தகுதி கிஞ்சிற்றும் கிடையாது'

## 'பெரும்பான்மையினரின் மொழி என்ற வாதம் நம்மை ஏமாற்ற நினைக்கும் வித்தையே'

*புள்ளிவிவரம் காட்டி சாடுகிறார் அனுமந்தையா*

## 'ஒற்றுமை உருவாகும் என்றபேச்சு சாரமற்றது' என்கிறார் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி

பெங்களூர், நவ. 6—

"எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் இந்தியாவின் தேசிய மொழியாவதற்கு இந்திக்கு எந்தவிதத் தகுதியும் கிடையாது.

"இந்தியை, இந்தியாவின் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டால், தென்னாட்டவராகிய நாம் என்றென்றைக்கும் வடநாட்டவரால் ஆளப்படுகிறவர்களாகவே இருக்க நேரிடும்.

"எனவே, இப்போதுபோல என்றென்றைக்கும் ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்"

—என்று, மைசூர் மாநிலத்தின் முன்னாள் முதன் மந்திரியான கே. அனுமந்தையா அவர்கள் இந்திக்கு எதிராக முழக்கமிட்டிருக்கிறார்.

இங்கு சட்டக் கல்லூரியில் பேசிய அவர், இந்தியாவில் பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழி இந்தி என்ற வாதத்தை, புள்ளி விவரம்காட்டி, பொய் என்று நிரூபித்த அவர், மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"சில மொழிகளையும் சேர்த்து இந்தி பேசுவோரின் எண்ணிக்கை 15 கோடிக்குமேல் இல்லை. இந்திமட்டும் பேசுவோர் சுமார் 10 கோடிபேர் தான் இருக்கலாம்.

மாநிலவாரியாகப் பார்த்தால் மூன்று மாநிலத்தவரே இந்தி மொழி பேசுகின்றனர். பின் எப்படி, பெரும்பான்மையினரின் மொழி என்ற சாக்கில் அது நாடு முழுவதற்குமான மொழியாகிவிட முடியும்? இந்தி மொழியைப் பிறர்மீது திணிக்க விரும்புகிறவர்கள் அது பெரும்பான்மையினரின் மொழி எனக் கூறி மக்களை ஏமாற்ற நினைக்கின்றனர்.

இராஜாஜியும் இதரரும் சேர்ந்து இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையைப் பார்த்தேன்; எல்லா வகையிலும் இந்த விவகாரம் பற்றி நான் படித்தவற்றுள் அந்த அறிக்கைதான் தலைசிறந்ததாகும்.

'இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டால் தென்னாட்டவராகிய நாம், என்றென்றைக்கும் வடநாட்டவரால் ஆளப்படுவோம்.

'இந்தியாவிலிருந்து வெளியேறு' என்ற தீர்மானம்— அதுவே ஆங்கிலத்தில் எழுதப்பட்டதுதான் — இன்று அறிவுடைய மக்கள் அனைவரும் ஒரு உலக சர்க்கார் 'பெடரேஷனா'க அமைய வேண்டும் என்று கூறுவதைப்போல — 'இந்தியாவுக்கு ஒரு பெடரேஷன் வேண்டும்' என்று கூறியது. அதுபோன்ற ஒரு சர்க்கார் அமையும்—நமது வாழ்நாளிலேயே அமையும்-ஒரு உலக சர்க்கார் வேண்டும் என்பதில் யாரும் இப்போது தகராறு செய்வதில்லை; இன்றைய விஞ்ஞான சாதனைகள், உலகை, அந்த இலட்சியம் நோக்கித் துரத்துகின்றன.

"அப்படி ஒரு உலக சர்க்கார் அமைந்தால், அந்த சர்க்காரின் மொழி எதுவாக இருக்கும்?

"இந்தி மொழியா அந்த சர்க்காரின் மொழியாக இருக்கும்? (பலத்த சிரிப்பு)

"எந்த வகையில் பார்த்தாலும் இந்தியாவின் தேசிய மொழி ஆவதற்கு இந்திக்குத் தகுதி இல்லை. ஆட்சி மொழியைப் பொறுத்து இப்போதுபோல

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆந்திர சட்டசபையில் விசித்திரம்

## ஆளும் கட்சியினரே வெளிநடப்பு செய்கின்றனர்

### படாஸ்கர் அறிக்கைமீது விவாதம்கோரி நடவடிக்கை

ஐதராபாத், நவ. 6—

ஆந்திர சட்டசபையிலிருந்து இன்று ஆறு காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்திருக்கின்றனர்.

நான்கு பேர், படாஸ்கர் அறிக்கையை விவாதிக்க சந்தர்ப்பம் தரவில்லை என்று கூறியும், இருவர், தங்களுக்கு உணவுப் பிரச்சினை விவாதத்தின்போது பேச வாய்ப்பு தரவில்லை என்று கூறியும் வெளிநடப்புச் செய்திருக்கின்றனர்.

சட்டசபை வேலைகள் பற்றிய ஆலோசனைக் குழுவும், சர்க்காரும், படாஸ்கர் தீர்ப்பு அறிக்கையை விவாதிக்க ஒத்துக் கொண்டிருக்கின்றன என்றும், ஆனால் இன்னும் விவாதத்திற்கான நாள் குறிப்பிடவில்லை என்றும் தெரியவருகிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சட்டசபையிலிருந்து வெளிநடப்புச் செய்வது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.

படாஸ்கர் தீர்ப்பை விவாதிக்க வேண்டுமெனக் கோரி வெளியேறியவர்களில் மூவர் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

### காங்கிரஸ் ஆளவந்தார்களின் விருப்பமான பொழுதுபோக்கு

# வரிப் பணத்தைப் பாழடிப்பதுதானா?

## ரூ. 4 கோடி திட்டத்தில் கொள்ளைபோனது எவ்வளவு?

## கால்வாய்க்கென வாங்கிய சிமெண்டு வெளியில் விற்கப்பட்ட வெட்கக்கேடு

காங்கிரஸ் ஆளவந்தார்களின் நிர்வாக 'இலட்சணம்' உலகறிந்ததே!

இவர்கள், மக்களின் வரிப் பணத்தைக் கோடிக்கணக்கில் பாழடிப்பதை, மிக விருப்பமான பொழுதுபோக்காக கொண்டுவிட்டனர் போலும்!

மேலும் இதோ ஒன்று!

துங்கபத்திரா அணைக்கட்டுத் திட்டத்தின் மூலம் ரெய்ச்சூர் மாவட்டத்தில் மட்டும் 1955—56-ம் ஆண்டில் ஒரு இலட்சம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறும் என எதிர்பார்க்கப்பட்டதாம்; ஆனால், பத்தாயிரம் ஏக்கர் மட்டுமே அந்த வசதியைப் பெற்றதாம்.

ஏன் இதுபோன்ற அவலநிலை தெரியுமா? ஆந்திர சட்டசபை இதற்குப் பதில் தந்திருக்கிறது.

ரூ. 4 கோடி செலவில் கர்னூல்-கடப்பா கால்வாய் அமைக்கப்பட்டது பற்றிய அறிக்கையில் அந்தப் பதில் அடங்கிக் கிடக்கிறது.

கால்வாயின் கிளைகள் மிகத் தரக் குறைவாக அமைக்கப்பட்டனவாம். இந்தத் தரக் குறைவான நிர்மாணத்தினால் இந்தக் கால்வாய் மூலம் பாசன வசதி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலப் பரப்பு 3 இலட்சம் ஏக்கர்; ஆனால், உண்மையில் பாசன வசதி பெற்றதோ 300 ஏக்கர்; காரணம், கால்வாய் ஓடுகால்கள் தரக் குறைவாக, திட்டமிட்டபடி இன்றி மோசமாக நிர்மாணிக்கப்பட்டனவாம்; அதாவது, கால்வாய்க்கென வாங்கப்பட்ட சிமெண்டு, ஏராளமான அளவில் வெளியில் விற்கப்பட்டுவிட்டதாம்!

**செலவிட்டது ரூ. 4 கோடி— ஏழையின் வரிப் பணம்!**
**திட்டமிட்டது 3 இலட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி!**
**ஆனால் கிடைப்பதோ 300 ஏக்கருக்குப் பலன்!**

இடையில் வாங்கப்பட்ட 'சிமெண்டு' வெளியில் விற்கப்பட்டுவிட்டது—இதற்குக் காரணம்!

காங்கிரஸ் ஆட்சியில் வரிப் பணம் பாழாகும்விதம் பார்த்தீர்களா?

இதில் இன்னும் வெட்கக்கேடானது என்னவென்றால், இந்த வகையில் இலட்சக்கணக்கான ரூபாயை விழுங்கி ஏப்பமிட்டவர்கள்மீது, ஆந்திர சர்க்கார் நடவடிக்கை ஏதும் எடுக்க விரும்பவில்லையாம்!

## 'மழையின் காரணமாக அவதிப்படும் மக்கட்கு உதவியளிக்க வேண்டும்'

## சட்ட மன்றத்தில் அண்ணாமலை வேண்டுகோள்

'சென்னை நகரத்தில் கனத்த மழையின் காரணமாக ஏழை மக்கள் படும் அல்லல்கள் பற்றி ஆராய சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட வேண்டும்' என்று, 5—11—57-ல், நமது கழக உறுப்பினர் தோழர் எஸ்.எம்.அண்ணாமலை ஓர்தீர்மானம் கொண்டுவந்தார்.

நிலைமையை ஆராய்ந்து, சட்ட மன்ற விதிகளின் 41-வது விதியின்கீழ் அறிக்கை ஒன்றை இன்று நிதி அமைச்சர் வெளியிடச் சம்மதித்தார்.

இன்று காலை, கேள்வி நேரத்திற்குப் பிறகு கழக உறுப்பினர் தோழர் எஸ். எம். அண்ணாமலை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சென்ற சில நாட்களாக சென்னையில் பலத்த மழையின் காரணமாக பல இடங்களில்— குறிப்பாக சைதை, வியாசர்பாடி போன்ற இடங்களில் ஏழைகள் வாழும் குடிசைகள் வீழ்ந்ததாலும், நீர் தேங்கியதன் காரணமாகவும் மக்கள், இருக்க இடமின்றியும், சமைக்க வசதியின்றியும் தவிக்கின்றனர்.

"அவர்களுக்கு உடனடியாகத் தங்குவதற்கு ஏற்பாடும், சேரி ஒழிப்புத் திட்டத்தின்கீழ் உதவியும் அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டுகிறேன்.

"சைதையில் பல சலவைத் தொழிலாளர்களின் துணிகள் ஆற்றில் அடித்துக்கொண்டுபோய் விட்டன. அவர்களுக்கு உதவி அளிக்க வேண்டுகிறேன்."

தொடர்ந்து நிதி அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு, மழையின் காரணமாக ஏற்பட்டுள்ள சேதம் பற்றி அரசாங்கம் அவ்வப்போது ஆராய்ந்து வருகிறது என்றும், நகரசபைப் பள்ளிக்கூடங்களில் வீடிழந்தவர்களுக்குத் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், உணவு அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினர்.

## சைப்ரசிற்குப் புதிய கவர்னர்

சைப்ரசில் பிரிட்டனின் கவர்னராயிருந்த சர் ஜான் ஹார்டிங், அவரது பதவிக் காலம் முடிந்ததையொட்டி மாற்றப்பட்டுவிட்டார்; அவருக்குப் பதிலாக சர் ஹக் புட் என்பார் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் இந்தக் கவர்னர் மாற்றம், பிரிட்டிஷாரின் கொள்கை மாற்றத்திற்கு அறிகுறியா என்றால், இல்லை என்றே சொல்லப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ்
சென்னை 7—11—57 வியாழன்

# நிதி அமைச்சர் கோரிக்கை

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றிவைப்பதற்குத் தேவைப்படும் பெருந்தொகையை, உள்நாட்டு மக்களிடமிருந்து திரட்டப்படும் சிறு சேமிப்பு மூலமும் ஈடுசெய்ய வேண்டும் என்பது, திட்ட ஏற்பாடு. ஆனால் திட்டகர்த்தாக்கள் எதிர்பார்த்தபடி, சிறு சேமிப்பு முயற்சி வெற்றிகரமாக நடைபெறவில்லை. எனவே, அதில் வெற்றி காண்பதற்கான முயற்சி ஆராயப்படுகிறது.

அத்தகு ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடிய வட்டார மாநாட்டை சென்னை நிதி அமைச்சர் திறந்துவைத்திருக்கின்றார். அம்மாநாட்டில் கலந்துகொண்ட தேசிய சேமிப்பு நிதியின் தலைமை அதிகாரி, சென்ற ஆண்டில் சேமிப்பு நிதி மூலம் ரூ. 63 கோடி திரட்டி இருப்பதாகவும், இந்த ஆண்டில் திரட்டுவதென முடிவு கட்டப்பட்டுள்ள ரூ. 120 கோடியில் குறைந்த அளவே திரட்டப்பட்டிருப்பதாகவும், இப்பொழுது திரட்டப்பட்டுள்ள அளவு, திட்டமிட்டுள்ள தொகையைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கையைத் தருவதாக இல்லை என்றும் தெரிவித்திருக்கின்றார்.

அம்மாநாட்டைத் துவக்கி வைத்த சென்னை நிதி அமைச்சர், சேமிப்பைத் தீவிரப்படுத்துவதற்கான கருத்துக்களை அறிவித்துள்ளார். நகரப் பகுதிகளில் சேம நிதி திரட்டப்படுவதற்காகக் கையாளப்படும் முறைகள், கிராமப் பகுதிகளுக்குப் பயனளிக்காது என்றும், அதற்குச் சிறிதளவு கட்டாயப்படுத்தல் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிராமப் பகுதிகளில் கட்டாயப்படுத்தி சேமிப்பு நிதி திரட்டுவது என்றால் என்ன என்பதற்கு நிதி அமைச்சர் தெளிவான விளக்கமளித்திருக்க வேண்டும். ஆனால் அவரோ, அவ்விளக்கத்தைத் தரவில்லை. கட்டாயப்படுத்தித் திரட்ட வேண்டும் எனப் பொதுப்படையாகக் குறிப்பிட்டதுடன் இருந்துவிட்டார்.

பொதுமக்களைக் கட்டாயப்படுத்திப் பணம் திரட்டுவதின் உள்ளடக்கத்தை, இங்குள்ள பொதுமக்கள் நீண்டகாலமாக அனுபவித்து வந்திருக்கின்றார்கள். நிலவரி, விற்பனை வரி, வருமான வரி துறையினரிடம் சிக்கி, இத்தகைய நிதி திரட்டுவதில், பொதுமக்கள் பட்டுள்ள அவதி சொல்லுக்கடங்காததாகும்.

இத்துறைகளில் ஈடுபட்டு வரும் அதிகாரிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி, இவர்கள் மேற்கொள்ளும் நிதி திரட்டலுக்கு, பொதுமக்கள் கொடுத்து கொடுத்து மனம் நொந்து போயிருக்கின்றனர். தங்கள் கோரிக்கைக் கிணங்க நிதி அளிக்க மறுக்கின்றவர்களையும், இந்த அதிகாரிகள் பழிவாங்கத் தயங்கியது கிடையாது. அரசாங்க அதிகாரிகள் என்றால், பொதுமக்களுக்கு அதிருப்தியும், அலட்சியமும் இன்று இருந்து வருவதும் இதன் விளைவேயாகும். எனவே, கிராமப் பகுதிகளில் சேமிப்பு நிதி திரட்டும் பணியை அந்த அதிகாரிகளிடம் ஒப்படைத்து, சிறிதளவு கட்டாயப்படுத்தி வசூலிக்கலாம் என்ற அனுமதியும் அளிப்பது விரும்பக்கூடியதுமல்ல — வரவேற்கத் தகுந்ததுமல்ல—வெற்றி பெறக்கூடியதுமல்ல.

இரண்டாவதாக, பரிசுத் திட்டங்களைக்கொண்டு சேமிப்பு நிதி திரட்டலைத் தீவிரமாக்கலாம் என்றும் நிதி அமைச்சர் கருத்தறிவித்துள்ளார். இது பயனளிக்கக்கூடிய முறை என்றாலும், இம்முறையினால் தேவைப்படும் அளவு சேமிப்பு நிதி திரட்ட முடியுமா என்பது ஐயத்திற்குரியதாகும்.

இதுவரை திரட்டப்பட்டுள்ள நிதியானாலும் சரி, இனி திரட்டப்பட இருக்கும் நிதியானாலும் சரி, இந்தச்சிறு சேமிப்புநிதிக்குப் பணமளித்திருப்பவர்கள் எவர் என்பது ஆராயத்தக்கது. பெருந்தொகையினராக உள்ள ஏழை மக்களுக்கும் இந்தச் சேமிப்பு நிதிக்கும் கடுகளவு தொடர்பும் கிடையாது என்பது மறுக்கமுடியாத உண்மை. நாள் தவறாமல் வயிற்றை நிரப்புவதிலேயே கால்வயிறு அரை வயிறு என்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற ஏழை மக்களிடம் சேமிப்பை எப்படி எதிர்பார்க்க முடியும்?

அடுத்தபடியாக நடுத்தர மக்களை எடுத்துக்கொண்டால், இன்றியமையாப் பொருட்களின் விலை ஏற்றத்தின் காரணமாக, அவர்களிடத்திலும், சேமிப்பு நிதிக்கு அளிக்கும் அளவிற்கு மிச்சமாகப் பணம் இருக்கமுடியாது. எனவே, ஏதோ கொஞ்சம் பணத்தை மிச்சமாக வைத்திருக்கின்றவர்கள்தான் இந்தச் சேமிப்பு நிதிக்கு அளித்திருக்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.

கிராம மக்களின் பணநிலையும் ஏறத்தாழ இதுவேயாகும். கிராம மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு மக்கள் சொந்தத்தில் நிலமில்லாதவர்கள்—அல்லது செலவுக்கு ஈடுசெய்ய முடியாத குறைந்தபட்ச நிலம் பெற்றிருப்பவர்கள் —வேறு தொழில் எதுவும் இல்லாதவர்களேயாவர். இவர்களால் எதை சேமிக்க முடியும்? இவர்களை ஒதுக்கிவிட்டால், மீதமுள்ள சிறுதொகையினரிடமிருந்துதான் ஏதாவது சேமிப்பு நிதியின் பெயரால் திரட்ட வேண்டும். கிராம மக்களின் நிலைபற்றி தெரிந்திருக்கின்ற காரணத்தினால்தான், அதிகாரிகளைக் கொண்டு கட்டாயப்படுத்தி வசூல் செய்வதாக இருந்தால் தான் சிறு சேமிப்பு நிதியைப் பெருக்க முடியும் என்ற முடிவிற்கு சென்னை நிதி அமைச்சர் வந்துள்ளார் போலும்!

சேமிப்பு பத்திரங்களை தமிழ் மொழியில் வெளியிடுவதின் மூலம் பணம் திரட்டுவது இயலும் என்றும் நிதி அமைச்சர் நல்வாக்கு தந்துள்ளார். ஏதோ தமிழுக்கு சிறு இடம் கிடைக்கிறதே என்ற அளவில் நாம் திருப்தி கொள்ளலாம்.

இறுதியாக, நிதி அமைச்சர், 'இந்தச் சிறு சேமிப்பு நிதியைத் திரட்டுவதில் கூடவா மாநிலங்களுக்குத் தம்மிச்சையாக நடந்துகொள்ளும் உரிமை இருக்கக்கூடாது? இதில்கூடவா 'அகில இந்தியா' ஆதிக்கம் இருக்க வேண்டும்?' என்று பரிதாபமாகக் கேட்டிருக்கின்றார்.

'இந்த நிதி திரட்டும் ஒன்றிலாவது எம் விருப்பமான முறையைப் பின்பற்ற எமக்கு உரிமை அளிக்க வேண்டும்' என்ற நிதி அமைச்சர் கோரிக்கைக்கு அனுமதி கிடைக்குமா? ஒருவேளை திட்டத்திற்குரிய நிதி திரட்டும் பணியாக இருப்பதால், நிதி அமைச்சர் கோரிக்கை வெற்றி பெற்றாலும் பெறக்கூடும்.

## மதுரை-சென்னை விமான வசதி

சட்டமன்றத்தில் க. அன்பழகன், எம். பி. சுப்பிரமணியம் கேள்விகள்

சென்னை, நவ. 6—

"சென்னைக்கு அடுத்து மக்கள் தொகையில் பெரிதாக உள்ள மதுரையிலிருந்து சென்னைக்கு விமானப் போக்குவரத்து வசதி ஏற்படுத்தாதது ஒரு குறையாக இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?" என்று நமது கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் கேட்டார்.

"விமானப் போக்குவரத்து வசதி மதுரைக்கு இல்லாதது, அதன் சிறப்பைக் குறைப்பதாகாது; புகை வண்டி மூலம் மக்கள் செல்ல வசதி இருக்கிறது" என்று அமைச்சர் பக்தவத்சலம் பதிலளித்தார்.

"விமானப் போக்குவரத்து மூலம் இந்திய மாநிலங்களின் தலைநகர்களை ஒன்றாக இணைப்பதற்கு மத்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது தெரியுமா?" என்று நமது கழக உறுப்பினர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்டார்.

"அப்படி ஒன்றும் இம்மாநில சர்க்காருக்குத் தகவல் இல்லை" என்று அமைச்சர் பதிலளித்தார்.

## தனது பரிதாபகரமான நிலை பற்றி கிருபளானி!

இலட்சுமணபுரி, நவ. 5—

அரசியலில் தனது பரிதாபகரமான நிலை குறித்து பி. சோ. தலைவர் ஆச்சாரியா கிருபளானி பத்திரிகையாளரிடம் பேசியிருக்கிறார்.

அரசியலிலிருந்து தூரத்தப்படுகிறவர்களின் வரிசையில் தான் இருப்பதாக அவர் ஏற்கனவே கூறியுள்ளாராம்!

அது பற்றிக் கேட்டபோது, தான் படிப்படியாக ஓய்வு பெற்று வருவதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

"என்றாலும், நான் இன்னும் அரசியல் துறையிலிருந்து விலகிவிடவில்லை. 'துரத்தப்படுகிறேன்' என்று ஏன் கூறினேன் என்றால், நாட்டில் என்னைப் பின்பற்றுவோர் இல்லை; நான் சார்ந்திருக்கும் கட்சியில்கூட இல்லை என்பதினால்தான்!

"எனது கட்சி உட்பட எவரும் என் தலைமையைப் பின்பற்றுவதில்லை. மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை எந்தவிதத் தகராறும் இன்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கூறினேன்; ஆனால் எனது கட்சியினரே அதனை ஏற்கவில்லை"

என்றும் கிருபளானி அவர்கள் கூறி வருத்தப்பட்டுக்கொண்டாராம்!

# கடன் வழங்குவது பற்றிய விதிகள்

## 'மக்களுக்கு உதவும் நோக்கத்துடன் அணுகவேண்டும்'

கூட்டுறவு இயக்கத்தினரிடை காமராசர்

சென்னை, நவ. 3—

ஏழை மக்களுக்குக் கடன் கொடுப்பது பற்றிய விதிகளை தாராள மனப்போக்குடன் வியாக்கியானம் செய்ய வேண்டுமென முதன் மந்திரி காமராசர் அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் பேசுகையில் குறிப்பிட்டாராம்!

"மக்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்துடன் அல்லாது, கடன் மறுப்பதை நியாயப்படுத்தும் நோக்கத்துடன் விதிகளை வியாக்கியானம் செய்யக்கூடாது" என்றும் அவர் கூறினாராம்!

மேலும் பேசுகையில் அவர், 'இதுபோன்ற விழாக்கள், கூட்டுறவு இயக்கத்தின் அவசியம், பலன், சாதனை இவற்றையெல்லாம் எல்லா மக்களும் அறியும் வண்ணம் செய்வதற்குப் பயன்படவேண்டும்' என்றும், 'இப்போது ஆயிரக்கணக்கான மக்களுக்குக் கூட்டுறவு இயக்கத்தின் அவசியமும், நலன்களும் தெரியாது' என்றும், 'அந்த மக்களுக்கு எல்லாம் தெரியும்படி செய்யவேண்டும்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

# தமிழ் நாட்டிலிருந்து கேரளத்திற்கு அரிசி

## 'எடுத்துச் செல்லப்படும் அளவு நிர்ணயிக்கப்பட வேண்டும்'

மத்திய சர்க்காரிடம் முறையிட்டிருப்பதாக சட்டமன்றத்தில் பக்தவத்சலம் தகவல்

சென்னை, நவ. 5—

செப். 30-ந்தேதியுடன் முடிவடைந்த மூன்று மாத காலத்தில் மட்டும் சென்னையிலிருந்து கேரளத்திற்கு இரயில் மூலம் 43,280 டன் அரிசி எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக சட்டசபையில் உள்நாட்டு மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் அதேநேரத்தில, அந்த மூன்று மாத காலத்தில் 2,780 டன் அரிசி மட்டுமே சென்னைக்கு ஆந்திராவிலிருந்து வந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, மாநில சர்க்கார், சென்னையிலிருந்து கேரளத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய அரிசிக்கு ஒரு உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டும் என மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறது என்றும் மந்திரி பகன்றார்.

சென்னையின் உணவுப் பற்றாக்குறை ஒன்றரை இலட்சம் டன் என்றும், பருவகால நிலைகள் பாதகமாக அமைந்தால் இது மூன்று இலட்சம் டன்னாகக்கூட ஆகிவிடும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## 200 பேரை ஏற்றிச் செல்லும் புதிய விமானம்

ரஷ்யா பறக்கவிடும்

மாஸ்கோ, நவ. 6—

வெகு விரைவிலேயே ரஷ்யா, 200 பேர்களை ஏற்றிச் செல்லக்கூடிய பிரும்மாண்டமான விமானமொன்றை பறக்கவிடக் கூடுமாம்!

## பாலாற்றுக்குத் தண்ணீர்

'இறுதி முடிவு எடுக்கவில்லை' என்கிறார் பக்தவத்சலம்

சென்னை, நவ. 3—

பலாற்றுக்கு நீர் கிடைப்பது பற்றி, மைசூர்—மத்திய சர்க்கார் பிரதிநிதிகளுடன், மாநில எஞ்சினீயர் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய அறிக்கை கிடைத்துவிட்டது என்றும், சர்க்கார் இன்னும் முடிவு மேற்கொள்ளவில்லை என்றும், இறுதி முடிவு மேற்கொள்ளுமுன் மத்திய சர்க்கார் மந்திரியுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றும் மந்திரி பக்தவத்சலம் மேல் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அக். 19-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு ஒரு புள்ளி அதிகரித்து, 371-ஆக நின்றது; மிளகாய், நல்லெண்ணெய் ஆகியவைகளின் விலை உயர்வே இந்த அதிகரிப்புக்குக் காரணம்.

## தணியாத மொழிவழி மாநிலக் கிளர்ச்சி

பெல்காமில் துக்க நாள்

மைசூருடன்இணைத்ததற்கு எதிர்ப்பு

பெல்காம் மைசூருடன் இணைக்கப்பட்டதை எதிர்த்து மராட்டியர்கள் நவம்பர் முதல் நாளை துக்க நாளாகக் கொண்டாடினார்கள்.

கடந்த நவம்பர் முதல் நாளில் தான் பெல்காம் இணைக்கப்பட்டது.

நகர முழுவதும் பரிபூரண 'அர்த்தால்' நடைபெற்றிருக்கிறது.

நடைபெற்ற கூட்டம் ஒன்றில், 'மாநில எல்லைப் பிரச்சினைகள், மராட்டியரின் விருப்பத்திற்கு ஒப்ப தீர்க்கப்பட்டவில்லை என்பதால், மராட்டியர்கள் இறுதிவரை போராடியாக வேண்டும்' எனப் பேசப்பட்டது.

## கட்டணச் சலுகை

'எல்லோருக்கும் தரப்பட வேண்டும்'

ஏ. கோவிந்தசாமி கோரிக்கை

"சென்னை நகரத்தில் அரசாங்கம் நடத்திவரும் பஸ்களில் பிரயாணிகளுக்கு — குறிப்பாக மாணவர்களுக்குத் தரப்படும் குறிப்பிட்ட காலக் கட்டணச் சலுகை ஏன் எல்லோருக்கும் தரப்படக்கூடாது?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி சட்டமன்றத்தில் கேட்டார்.

"சோதனையாக இக்கட்டணச் சலுகை இப்போது சென்னையில் நடத்தப்படுகிறது; பிறகு அத்திட்டம் மற்ற வழிகளிலும் அமுலாக்குவது பற்றி முடிவு செய்யப்படும்" என்று அமைச்சர் வெங்கட்ராமன் பதிலளித்தார்.

# ஏகாதிபத்திய வெறியர்களுக்கு இறுதி எச்சரிக்கை

## இந்தித் திணிப்பிற்கு எதிராக திரண்டெழும் வீரர் பட்டாளம்

### அக். 13 : தமிழகம் குமுறிய காட்சி

தி. மு. க. பொதுச்செயலாளர் விடுத்த அறிக்கைக்கிணங்க 13—10—57-ல் நாடெங்கும் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்— பொதுக்கூட்டங்களின் விவரம் இங்கு தரப்படுகிறது :—

★

**இராசபாளையம் :**

மாலை 4 மணிக்கு, கார் நிலையத்திற்கு கிழ்ப்புறமுள்ள திடலிலிருந்து த. இராமச்சந்திரன் தலைமையில் மாபெரும் இந்தி எதிர்ப்பு சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய வீதிகள் வழியாகச் சுற்றி, கார் நிலையத்திற்குக் கிழக்கே உள்ள திடலில் வந்து சேர்ந்தது ; பின் இந்தித் திணிப்பைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

**திருவையாறு :**

தி. மு. கழகச் சார்பில், 17—10—57 மாலை தோழர் என். பொன்னுசாமி தலைமையில். மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு முக்கிய நான்கு வீதிகளும் சென்று இரவு சுமார் 7 மணியளவில், ஓடத்துறை தெரு, புறுகூட்டிற்கருகாமையில் நமது இயக்க இருவண்ண கொடிக்குக் கீழ் நின்று இந்தியை முறியடிக்க— திராவிடத்தை மீட்க கூடியிருந்த இயக்க நண்பர்கள் ஒவ்வொருவரும் உறுதி எடுத்தபின் ஊர்வலம் கலைந்து சென்றது.

**முத்துநகர் :**

கே. வி. கே. சாமி படிப்பகச் சார்பில், 12—10—57 இரவு 7 மணிக்கு, படிப்பகத்தில், தோழர் ப. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், இந்தியை எதிர்த்தும், கண்டித்தும் தோழர்கள் பலர் பேசினர்; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வீரவநல்லூர் :**

தி. மு. கழகச் சார்பில் , இந்தி எதிர்ப்பு சைக்கிள் ஊர்வலம், தோழர் இசக்கி தலைமையில் நடைபெற்றது; கழகத் தோழர்களும் பொதுமக்களும் பள்ளி மாணவர்களும் கலந்துகொண்டனர்.

**குளத்தூர் :**

பரமக்குடி வட்டம், குளத்தூர் தி. மு. கழகச் சார்பில், பாண்டியன் திடலில், பொதுக்கூட்டமும், தோழர் மு. நாராயணன் தலைமையில் ஊர்வலமும் நடைபெற்றது; கூட்டத்திற்கு தோழர் பி. ராமு தலைமை வகித்தார்; வே. பழனி இயக்கப் பாடல்கள் பாடினார்; தோழர்கள் இரா. புகழேந்தி, இளங்கண்ணன், நாதன் முதலியோர் உரையாற்றினர்; பின்னர், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**புதுக்கோட்டை :**

மாலை 4 மணிக்கு இந்தி எதிர்ப்பு ஊர்வலம் கொடும்பாவியுடன் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு கீழராஜ வீதி, வடக்கு ராஜ வீதி வழியாக திலகர் திடல் வந்தடைந்தது; அங்கு 6 மணிக்கு தோழர் க. வீரையா தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்தித் திணிப்பைக் கண்டித்து தோழர்கள் பா. செழியன், க. ஞானமுத்து, இராசகோபாலன், சன்னராஜா, தங்கவடிவேல், கரிகாலன் ஆகியோர் பேசினர்.

**தண்டராம்பட்டு :**

மாலை 4 மணிக்கு, தி.மு. கழகச் சார்பில், தோழர் ர. நாமதேவ் தலைமையில் ஊர்வலமும், 6 மணியளவில் தோழர் வீ. திருமலை தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது; தோழர்கள் எம். எஸ். நடராசன், சொ. ராமதாஸ், ர. நாமதேவ் கே. வி. குப்புசாமி, வீ. திருமலை ஆகியோர் பேசியபின், தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**சென்னை—மயிலை :**

12—10—57 இரவு 10 மணிக்கு சவுந்திரபாண்டியனர் படிப்பக அலுவலகத்தில் நடந்த இந்தி எதிர்ப்புநாள் கூட்டத்தில் தோழர்கள் பலர் இந்தித் திணிப்பைக் கண்டித்து உரையாற்றினர்; தோழர் வே. காசி தலைமை தாங்கினர்; கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சென்னை-44வது வட்டம்:**

காலை 9 மணியளவில் ஆமில்டன் வாராவதி பஸ் நிலையத்திலிருந்து, தோழர் பி. இராமசாமி தலைமையில் மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு வட்டத்தின் பல பகுதிகள் வழியாகக் கண்டன முழக்கம் செய்து, இறுதியில் கிளைக் கழகப் பணிமனையில் முடிவுற்றது. அங்கு நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில், இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பல தோழர்கள் விளக்கிப் பேசினர்; கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

**சென்னை—சைதை :**

காலை 9 மணியளவில் தோழர் தங்கதுரை தலைமையில் ஊர்வலமும், ; பொதுக்கூட்டமும் நடைபெற்றது ; கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

**சத்துருசங்காரக்கோட்டை :**

தி. மு. கழகத்தின் சார்பில், தோழர் மு. இராமச்சந்திரன் தலைமையில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது ; தோழர்கள் மு. இளவரசன், வீர. வேந்தப்பன் ஆகியோர் இந்தியை எதிர்த்துப் பேசினர்.

**பழையநெல்லூர்**

மாலை 3 மணிக்கு தி. மு. கழகத்தின் சார்பில், தோழர் கோ. உத்திராபதி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டுச் சென்று மாரியம்மன் கோவிலுக்கு எதிரில் முடிவுற்றது ; அங்கு தோழர் இரத்தின பாலகுருசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது ; தோழர்கள் கோ. உத்திராபதி, ஆ. பிச்சாண்டி, சி. நடேசன், க. சிவசங்கரன் முதலியோர் பேசியபின் தீர்மானங்களைத் தலைவர்வாசித்து மக்களின் முழு ஆதரவுடன் நிறைவேற்றினர்.

**கெங்குவார்பட்டி :**

தி. மு. கழகச் சார்பில், இந்தி எதிர்ப்பு சைக்கிள் ஊர்வலமும், தோழர் வி. வி. குருசாமி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது; தோழர்கள் பாண்டியன், வெள்ளைச்சாமி ஆகியோர் பேசியபின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**அய்யம்பேட்டை :**

இந்தி எதிர்ப்பு சைக்கிள் ஊர்வலம் தோழர் க. சுப்பராயன் தலைமையிலும், மாலை 6 மணிக்கு கண்டனக் கூட்டம் தோழர் மு. எல்லப்பன் தலைமையிலும் நடைபெற்றது; தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை எம்.சி., வி. கே. பழனி, டி. எஸ். இரத்தினப்பா, பி. டி. வெங்கடசுப்பு ஆகியவர்கள் இந்தியை எதிர்த்து பேசினர்.

**இராயகிரி :**

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த இராயகிரி தி. மு. கழகச் சார்பில் இந்தி எதிர்ப்பு ஊர்வலமும், மாரியம்மன்கோவில் முன்பு தோழர் சா. இராமசாமி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது; தோழர்கள் கு. இளங்கோ, இரா. தங்கசாமி ஆகியோர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மல்லியக்கரை :**

மாலை 4 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், சட்டமன்ற உறுப்பினர் தோழர் டி. இருசப்பன் அவர்கள் தலைமையில், ஆரம்பப் பள்ளியிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிவழியாக வந்து அரசநத்தம் மாரியம்மன் கோவில் முன் தோழர் ஏ. எஸ். இராமச்சந்திரன் அவர்களால் கொடியேற்றப்பட்டு, முக்கிய வீதிகளின் வழியாகச் சென்றபின், மந்தைவெளி மைதானத்தை மாலை 6 மணிக்கு வந்தடைந்தது; அங்கு 7 மணிக்கு, தோழர் எம். பி. பெரியசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர்கள் எம். ஆர். மாணிக்கம், டி. இருசப்பன் எம்.எல்.ஏ., ஏ. எஸ். இராமச்சந்திரன், எஸ். ஏ. வடிவேலு, எம். கே. சுண்ணு, எம். கே. கணேசன் ஆகியோர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்; பின்னர், தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**ஆத்தூர் :**

மாலை 5 மணிக்கு ஆத்தூர் உயர்நிலைப்பள்ளி முன்னிலையிலிருந்து தோழர் அ. குள்ளப்பன் தலைமையில் தி. மு. கழகம், அண்ணா படிப்பகம், சூரசிங்கபுரம் தி. மு. கழகம், மற்றும் ஆத்தூர் வட்டத்திலுள்ள முப்பது கழகங்களுக்கு மேல் கலந்துகொண்ட ஊர்வலம் பொதுச்செயலாளர் அவர்களின் (அலங்கரிக்கப்பட்ட) திருஉருவப் படத்துடன், இந்தி எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பிக் கொண்டு முக்கியத் தெருக்கள் வழியாக வந்து இரவு 7-மணிக்கு சந்தைப் பேட்டை வந்தடைந்தது ; அங்கு நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் ஜி. என். பெரியசாமி முன்மொழிய, கே. எஸ். மணி வழிமொழிய தோழர் ஆர்.கன்னையன் தலைமையேற்று, தலைமையுரையாற்றினர் ; தோழர்கள் இரெ. இளம்வழுதி, எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., இராசு, ஜி. என். பெரியசாமி ஆகியோர் விரிவுரையாற்றிய பின் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**செங்குன்றபுரம் :**

இரவு 7-30 மணிக்கு, தோழர் மு. குருசாமி தலைமையில் ஊர்வலமும், இரவு 8 மணிக்கு, தோழர் க. குருசாமி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது; தோழர்கள் சி. முனிசாமி, அ. பாலச்சந்திரன் ஆகியோர் பேசியபின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**இராமச்சந்திரபுரம் :**

மாலை சுமார் 6 மணியளவில், சுந்தரபாண்டியம் பஸ் நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, வள்ளுவர் நூல்நிலயம். அகத்தாபட்டி, ரெங்கப்பநாயக்கர் பட்டி. வழியாக இராமச்சந்திரபுரம் தி. மு. கழக அலுவலகம் வந்து சேர்ந்தது; பின்னர், தோழர் அ. ச. சு. சண்முகப்பெருமான் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இலுப்பூர் :**

தோழர் எல். எஸ். எல்.மணன் தலைமையில் கழகப் பணிமனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு சின்னக்கடை வீதியாகவும், பல முக்கிய வீதி வழியாகவும் இந்தி எதிர்ப்பு ஒலி முழக்கங்களுடன் சென்று முடிவடைந்தது.

**மேலப்பாளையம் :**

தி. மு. கழகச் சார்பில் மாலை 4 மணிக்கு இந்தி எதிர்ப்புக் கூட்டம் தோழர் ம. உதுமான்மைதீன் தலைமையில் நடைபெற்றது ; தோழர்கள் ப. அ. இசுமாயில், அன்வர் காஜா, செ. கா. மு. யூசுப் ஆகியோர் இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துப் பேசியபின், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சின்னாளப்பட்டி :**

காலை 10-மணியளவில் இந்தி எதிர்ப்புப் பிரச்சார ஊர்வலம் நடைபெற்றது ; இரவு 7-மணிக்கு தோழர் பி. எஸ். எம். சவுடையா தலைமையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடைபெற்றது ; தோழர் ச. முத்துகிருஷ்ணன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் தி. சிதம்பரம், கு. செயராம், பி. பொன்னம்பலம், கே. அன்பழகன், முருகானந்தன், அ. வீரப்பன் ஆகியோர் இந்தியை ஏன் எதிர்க்கிறோம் என்பது பற்றிப் பேசினர். தோழர் ஏ. எம். ஜே. நாச்சியப்பன் அவர்களால் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு பொதுமக்கள் கையொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டன.

**சிறுகளப்பூர் :**

தி. மு. கழகச் சார்பில், இரவு 7 மணிக்கு, மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு, சோழன் திடலை வந்தடைந்தது; அங்கு தோழர் க. குருசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் அரங்கராசன், எஸ். எஸ். முத்துசாமி, எஸ். பி. முத்துகிருட்டினன், எஸ். கே. பிச்சை ஆகியோர் பேசியபின், கண்டனத் தீர்மானங்கள் மக்களின் கை ஒலிக்கிடையே நிறைவேற்றப்பட்டன.

**வல்லம்படுகை :**

மாலை 4 மணிக்கு, திரு. வி. க. படிப்பகத்திலிருந்து தோழர் வீ. துரைசாமி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய வீதிகள் வழியாகவும், சுற்று வட்டத்திலும் சென்று மு. அஞ்சபுலியார் இல்லத்தில் வந்து சேர்ந்தது; மாலை 6 மணிக்கு, செயலாளர் க. செயராமன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மணமேல்குடி :**

தி. மு. கழகச் சார்பில், கடைத் தெரு பொதுத் திடலில், தோழர் திரு. செ. மு. அகமத்தம்பி தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது; திரு. பெரி. சிவனடியான் இந்தி ஒழிக்கப்பட வேண்டிய காரணங்களை விளக்கிப் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஆரணி (வ. ஆ.) :**

தி. மு. கழகச் சார்பில் தருமராசா கோயில் மைதானத்தில், பொதுக்கூட்டம் தோழர் எஸ். ஏ. கன்னையன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, தென்னூர் மு. தருமராசன் ஆகியோர் பேசினர்; தீர்மானங்களை விளக்கி செயலாளர் தி. எத்திராசன் பேசினர். கூட்டத்திற்கு முன் ஊர்வலம் ஆரணி சீனிவாச முதலியார் சத்திரத்திலிருந்து தோழர் கே. பி. கண்ணன் தலைமையில் புறப்பட்டு நகர முக்கிய வீதிகளை வலம் வந்தது.

**மீஞ்சூர் :**

14—10—57 மாலை 5 மணிக்கு தோழர் எஸ். கணேசன் தலைமையில் இந்தி எதிர்ப்புக் கண்டன ஊர்வலமும், மாலை 6 மணிக்கு தோழர் எம். அப்துல்லா தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது ; தோழர்கள் ஆர். எஸ். பாண்டியன், டி. புரந்தரம், எம். ஏ. நாதம், டி. இராமசாமி, என். வி. தங்கச்சாமி, எஸ். ஏ. பாண்டியன், இராதாமணாளன், இராசன், இளங்கோ, திராவிடச் செல்வன் ஆகியோர் இந்தித் திணிப்பால் தமிழர்களுக்கு நேரிடும் இன்னல்களை விளக்கிப் பேசினர் ; பின்னர், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவள்ளூர் :**

தி. மு. கழகச் சார்பில் கண்டன ஊர்வலம் திரு. இராகவன் தலைமையில் புறப்பட்டுச் சென்று கூட்டத் திடலை வந்தடைந்தது; அங்கு தோழர் ஆர். ஏ. ரசாக் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின், இந்தியைப் புகுத்தும் நிலை குறித்து தோழர்கள் எச். ஏ. கனி, இளமாறன், எத்திராசன் ஆகியோர் பேசினர்.

**நடுக்காவிரி :**

மாலை 6 மணிக்கு, நடுக்காவிரி பள்ளிக்கு எதிரில், தோழர் முத்து சுப்பையன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் இமயவரம்பன், இராசன், புலவர்-செல்வம், மகேந்திரன் ஆகியோர் வடமொழியின் வளமின்மையையும், தமிழ் மொழியின் மாட்சியையும் விளக்கிப்பேசினர்.

**அஞ்சுகிராமம் :**

இரவு 8 மணிக்கு, தி.மு. கழகச் சார்பில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் தோழர் பெ. வேலாயுதப்பெருமாள் தலைமையில் நடைபெற்றது; தோழர் செ. ப. கணபதி பேசியபின், தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

**அலவாக்கோட்டை :**

தி. மு. கழகச் சார்பில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடைபெற்றபின், தோழர் ப. நாராயணன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது ; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## வெள்ளத்தால் மக்கள் படும் அவதி

சென்னை, நவ. 5—

சென்னை 47-வது வட்டப் பகுதியில் உள்ள ஏரிக்கரை (கோழிப்பண்ணை எதிரில்) இடைவிடாது பொழியும் மழையினால் ஏரியில் பெருத்த வெள்ளம் ஏற்பட்டு, கூரை குடிசைகளைப் பலமாகத் தாக்கின. சுமார் இரண்டு ஆயிரம் பேர் வசிக்கக்கூடிய இவ்வட்டாரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டு வீடிழந்து பாதவிப்பதோடு, இருக்க இடமின்றி அல்லலுறுகின்றனர்.

பல மரங்கள் முறிந்து வீழ்ந்து 9 வீட்டைத் தாக்கின; ஏராளமான வீடுகள் தண்ணீரில் மூழ்கியபடியே கிடக்கின்றன.

இவ்வட்டாரத்தைச் சேர்ந்த திரு. வி. க. மன்றச் செயலாளர் இரா. சடகோபன், குடிசை வாழ்வோர் முன்னேற்றச் சங்க செயலாளர் கே. கோவிந்தசாமி, கேப்டன் தம்பு, மற்றும், கழக உறுப்பினர்களும் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்க்காரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உடனடியாக, இத்துறையில் அல்லலுறும் குடும்பங்களுக்கு உதவியளிக்க வேண்டுமாறு கோரப்படுகின்றனர்.

---

### இதழ்கள் விற்பனையின்

## இடமாற்றம்

புதுவையில், தோழர் கே. ஏ. ஜலீல், நெ. 25, தய்ப்ளேக்ஸ் வீதி என்ற முகவரியில் விற்கப்பட்டு வந்த இயக்க இதழ்கள் யாவும், இந்த நவம்பர் முதல் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கும் :—

ச. சிவப்பிரகாசம்,
C/O கண்ணன் சவுண்டு சர்வீஸ்,
90, காந்தி வீதி, புதுவை

# பெரியார் கைதாகி ஜாமீனில் விடுதலையானார்

திருச்சி, நவ. 6—

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நேற்று மாலை இங்கு கைது செய்யப்பட்டு, உடன் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்.

மாவட்ட போலீஸ் அதிகாரிகள் அவரை, அவரது இல்லத்தில் வைத்து மாலை 5-30 மணியளவில் கைது செய்தனர்; பின், மாவட்ட ஜுடிஷீயல் நீதிபதிமுன் ஆஜர்படுத்திய போது, அவர்; ரூ. 1,000 சொந்த ஜாமீனில் அவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

இ. பி. கோ. 117-வது பிரிவின் படி பெரியார் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

## சென்னையில் சேரிகள் சீரமைப்பு

'பாதிக்கப்பட்டோருக்கு முதலில் உதவியளிக்கப்படுமா?'

க. அன்பழகன் கேள்வி

சென்னை, நவ. 6—

"சென்னை துறைமுகப் பகுதியில் சேரி சீர்திருத்தம் பற்றி சென்னை நகரசபை மேற்கொண்ட சில திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு ரூ. 1,01,100 ஒதுக்கப்பட்டுள்ளது" என்று தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ், மழையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் சேரிகளுக்கு முதலில் உதவியளிக்க அரசாங்கம் முன் வருமா?"

என்று கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் கேட்டார்.

"சென்னை நகரசபை தற்காலிக உதவிகளைச் செய்ய முனைந்துள்ளது" என்று அமைச்சர் பதிலளித்தார்.

அமெரிக்கா தனது முதல் பாலசந்திரனை, அடுத்த வாரம் வானவெளிக்கு அனுப்பும் என்று வானொலி நிறுவனம் ஒன்று தெரிவித்திருக்கிறது.

## எடுத்த நடவடிக்கை என்னவோ?

சென்னை, நவ. 6—

நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி தாலுகாவில் விளாத்திகுளம் பஞ்சாயத்து நிறுவனத் தலைவரின் தவறுகள் பற்றியும், பணம் கையாண்டுவிட்டது குறித்தும் சில உறுப்பினர்கள் முறையிட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமாம்.

அந்தப் பஞ்சாயத்து நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் நான்கு உறுப்பினர்கள் தங்கள் பதவியை விட்டு விலகிக்கொண்டதும் உண்மைதானும்.

வட்டார முனிசிபல் சண்காணிப்பாளர், இதுபற்றித் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாராம்.

என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது என்று தெளிவாகக் கூற 'ஸ்தலஸ்தாபன அமைச்சர் லூர்து அம்மையார் முன்வரவில்லை.

அறிவிப்பு

## தென்னிந்திய போட்டோக் கருவி வியாபாரிகள் கூட்டம்

இடம்: சென்னை அரண்மனைக்காரத் தெரு, ஒய். எம். ஐ. ஏ. கோகலே மண்டபம்.

தேதி, நேரம்: 11—11—57 மாலை 5 மணி

பொருள்: போட்டோக் கருவிகள் இறக்குமதிக் கோட்டாவில் மாறுதல் செய்ய இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரிக்கு விண்ணப்பித்துக் கொள்வது.

தலைவர்: சென்னை—மவுண்ட்ரோடு, ஜி. கே. வேல் கம்பெனி உரிமையாளர் ஜி. கே. வேல் அவர்கள்.

ஆந்திரா, சென்னை, கர்நாடகம், கேரள மாநிலங்களிலுள்ள எல்லாப் போட்டோ வியாபாரிகள், போட்டோ தொழிலில் ஈடுபட்டுள்ளோர், சினிமா 'ஸ்டில்' படம் எடுப்போர், 'பிளாக்' தயாரிப்பாளர், மற்றும் 'கமர்ஷியல்' ஓவியர்கள் அனைவரும் கூட்டத்திற்கு தவறாது வருகைதர வேண்டப்படுகின்றனர்.

அமைப்பாளர்கள்: ஏ. வி. இராமன், என். ஆர். மகாதேவன்

# தேசீயக்கொடி, காந்தியார் படம், அரசியல் சட்டம்

## இவற்றை அவமதிப்பதைத் தடுக்க சென்னை சர்க்காரின் மசோதா

சென்னை, நவ. 6—

இந்திய தேசீயக் கொடி, காந்தியாரின் உருவப்படம், சிலை, மற்றும் அரசியல் சட்டம் இவற்றை அவமதிக்கும் குற்றம் புரிவோருக்குத் தண்டனை தரும் நோக்குடன், '1957-ம் ஆண்டு தேசிய கௌரவத்திற்கு இழுக்கு நேரிடுவதைத் தடுக்கும் மசோதா' என்ற பெயரில் மசோதா ஒன்றினை சட்டசபையில் மந்திரி பக்தவத்சலம் கொண்டுவந்திருக்கிறார்.

இதன்படி, காந்தியார் படம் எரிப்பது, உருவச் சிலைகளை உடைப்பது, அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது, தேசியக் கொடியை எரிப்பது முதலியவை குற்றங்கள் என்றும், அதனால் அக்குற்றம் புரிவோருக்கு மூன்றாண்டு வரை சிறைத் தண்டனையும், அல்லது அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்றும் மசோதா கூறுகிறது.

இந்த மசோதா, வரும் நவ. 11-ந் தேதியன்று சட்டசபையில் விவாதிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

## சூலூர் கழகத் தோழர்களுக்கு:

கோவை மாவட்டம் சூலூர் கிளைக் கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்வது குறித்துத் தோழர்களைக் கலந்து விசாரித்தறிய, தலைமை நிலையத்தின் சார்பில், தி. மு. கழகப் பொதுக் குழு உறுப்பினர் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு, 10—11—57 ஞாயிறன்று சூலூருக்கு வருகிறார்.

சூலூர் கழக நிர்வாகிகள்-உறுப்பினர்கள் ஆகியோரும், புதிதாக உறுப்பினராகச் சேர விழையும் தோழர்களும் விசாரணை அதிகாரியிடம் 10-11-57 காலை 10 மணிக்கு நேரில் வந்திருந்து தங்கள் தங்களது கருத்தைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

## இந்திக்கு எதிராக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கிலமே என்றென்றைக்கும் நீடிக்க வேண்டும்.

"தலைமை உயர்நீதிமன்றத்திற்குச் சென்று இந்தியில் பேச விரும்பினால் பேசட்டும்; ஆனால் அதே வசதி, ஆங்கிலத்தில் பேச விரும்புவோருக்கும் தரப்பட வேண்டும்.

"கொஞ்சம் புத்திசாலித்தனத்தோடும், புரிந்துகொள்ளும் மனத்துடனும் அணுகித் தீர்க்கப்படவேண்டிய மனிதாபிமானப் பிரச்சினையாகும், இந்த ஆட்சிமொழிப் பிரச்சினை! இந்தவகையில், எந்த ஒரு பிரிவினரும் தங்கள் கருத்தை மற்றப் பிரிவினர் மீது திணிக்கக்கூடாது. பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் அடிப்படை ஜனநாயகம் இயங்காவிடின், அது குழப்பத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும்தான் வழிவிடும்; அதனால், மனக்கசப்பும் விரோத மனப்போக்கும்தான் வளரும்."

அனுமந்தையா அவர்களை ஆதரித்துப் பேசிய இந்திய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த கோதண்டராவ் அவர்கள், 'உரிய இடத்தில் தங்கள் குரலை ஒலிக்கத் தென்னாட்டவர் முன்வர வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்; 'அத்துடன், திரு. அனுமந்தையா அவர்கள், இந்தி விஷயத்தில் தென்னாட்டு மக்களின் கருத்தை டெல்லியில் அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் உணரும்வண்ணம் ஒரு தூதுக் குழுவை இட்டுச் செல்ல வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி பி. வாசுதேவ மூர்த்தி அவர்கள், 'இந்தியினால் இந்தியாவில் ஒற்றுமையை உருவாக்க முடியும் என்ற வாதம் சத்தற்றது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# கொள்கை, இலட்சியம் என்ன?

## கல்வி அறிக்கை விவாதத்தில் எம். பி. சாரதி

சென்னை, நவ. 6—

சட்ட மன்றக் குழு, கல்வி பற்றிய 'வெள்ளை அறிக்கை'யை ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கைமீது, சட்ட மன்றத்தில் கழக உறுப்பினர் தோழர் எம். பி. சாரதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கல்விச் சீர்திருத்தம் பற்றி சட்டமன்றக் குழு தந்துள்ள அறிக்கை பற்றி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கவிரும்புகிறேன்.

"கல்வி அமைச்சர் பேசுகையில், கல்வியைப் பற்றித் தெளிவான திட்டம், கொள்கை, இலட்சியம் இருக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார்; அதை நான் ஆதரிக்கிறேன்; ஆனால், அவருடைய பேச்சில் இந்தியைப் பற்றி தெளிவான—கண்டிப்பான முடிவு காணப்படவில்லை; ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அமைச்சருக்குத் தைரியம் இல்லையா? அல்லது எப்படியாவது மறைமுகமாக இந்தியைப் புகுத்திவிடலாம் என்று கருதுகிறாரா? அல்லது அமைச்சரவை ஆட்டம் கொடுத்துவிடும் என்று அஞ்சுகிறாரா என்பது புரியவில்லை.

"வட்டார மொழியல்லாத வேறு இந்திய மொழியைக் கற்க வேண்டும் என்று கூறுவதின் அர்த்தம் என்ன? இந்தியைப் புகுத்த மறைமுகமாக எண்ணியுள்ளாரா?

"1937-ல் இந்தியைப் புகுத்த முயன்ற முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார், இப்போது இந்தி வேண்டாம் என்று எச்சரித்திருப்பதை அமைச்சர் உணர்ந்திருப்பார் என்று எண்ணுகிறேன்.

"அமைச்சர் இரண்டு மணி நேரம் பேசினார்; ஆனால், அவர் பேச்சில் கொள்கையும் காணப்படவில்லை—இலட்சியமும் வெளியிடப்படவில்லை.

"வேலூரில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியருக்குத் தமிழ் தெரியாது; அவருடைய மேற்பார்வையில் 1,000 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர்; இந்த அவல நிலையைச் சீர்படுத்த அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

"பொதுவாக, மொழிப் பிரச்சினையில் குழப்பமே மலிந்துள்ளது; இது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

"சில பள்ளிகளில் மாணவர்களுக்குப் போதுமான இடமில்லை. ஆசிரியர்களுக்குத் தரப்பட்ட ரூ. 12 ஊதிய உயர்வு அமுலாக்கப்படவில்லை; இதைக் கவனிக்க வேண்டும்.

"தமிழ் ஆசிரியர்களுக்கு மதிப்பும் கௌரவமும் தரப்பட வேண்டும். பெண்களுக்கு அதிக உயர்நிலைப் பள்ளிகள் வேண்டும்.

"தனியார் நடத்தும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தை அரசாங்கம் நேரடியாகத் தரவேண்டும்.

"நகர சபைகளும் உயர்நிலைப் பள்ளிகளை நடத்த விதிகள் மாற்றப்பட வேண்டும்."

## தமிழ் விழா

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

கலந்துகொள்வார்

10—11—57 காலை 10 மணியளவில், பெங்களூரில்—சர் புட்டண்ண செட்டி டவுன் ஹாலில், திரு. டி. எம். வேதநாயகம் தலைமையில் தமிழ் விழா நடைபெறும்; திருமதி எஸ். கே. ஜெகதீசுவரி விழா வைத் துவக்கிவைப்பார்; தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர்கள் க. அப்பாதுரையார், ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., கண்ணதாசன், டி. கே. சீனிவாசன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர். இசை: சேலம்-நித்தியானந்தன்; கலை நிகழ்ச்சி: அசோகன் குழு வில்லுப்பாட்டு-'கலைவாணர் கதை'.

## ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு

ரூ.10 இலட்சம் ஒதுக்கியுள்ளதாக அமைச்சர் தகவல்

சென்னை, நவ. 6—

"கோவை மாவட்டத்தில் 1957—58-ம் ஆண்டில் ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் பகல் உணவு அளிக்க எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது?" என்று கேட்கப்பட்டபோது, 'மாநிலம் முழுவதற்குமாக ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது' என்று நிதி அமைச்சர் சட்டமன்றத்தில் பதிலளித்தார்.

## சென்னை 44-வது வட்ட அப்துல் மஜீத் படிப்பகம்

9—11—57 இரவு 9 மணிக்கு மயிலை பாட்சாத் தோட்டம் அப்துல் மஜீத் படிப்பகத்தில் வரவு-செலவு பரிசீலனைக் குழுக் கூட்டம் நடைபெறும்.

## கழகக் கூட்டம்

★

**பொன்னர்சங்கம்பட்டி:**

தி. மு. க. துவக்க விழா

9—11—57 இரவு 7 மணிக்கு

தலைவர்: பி. சுப்பிரமணியம்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

சு. நெடுமாறன்

கை. ஆறுமுகம்

ம. சோமசுந்தரம்

★

**பாபிரெட்டிபட்டி:**

(சேலம் மாவட்டம்)

9—11—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: தி. முரசு

பேசுவோர்:

ஈ. ஆர். கிருஷ்ணன்

நெடுஞ்சோழன்

★

**வாணியம்பாடி:**

வாரச்சந்தை மைதானம்

9—11—57 இரவு 9 மணிக்கு

தலைவர்: எம். பி. வடிவேல்

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்

## அணுசக்தியால் இயங்கும் பனி உடைப்பு கப்பல்

மாஸ்கோ, நவ. 6—

அணுசக்தியால் இயங்கும் உலகத்தின் முதலாவது பனி உடைப்புக் கப்பல் நாளையதினம் ரஷ்யா வெள்ளோட்டத்திற்கு விடக்கூடும்: தளத்திற்குத் திரும்பாமலே ஆண்டு முழுமையிலும் அது பிரயாணம் செய்யக் கூடியதாம்!

*************************************

வடசென்னை தேர்தல் வழக்கு நிதி

## சிறப்புக் கூட்டம்

★

9-11-57 சனி மாலை 6-மணிக்கு : சென்னை கோகலே மண்டபத்தில்

தலைவர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி M.L.A.

பேசுவோர்:

மு. கருணாநிதி, எம். ஜி. இராமச்சந்திரன்

நன்கொடை: ரூ. 1, அணா 8.

*************************************

**முகவரி மாற்றம்:**

பி. எம். கருணாகரன்,
பால்செட்டி சத்திரம் P. O.
(via) காஞ்சீபுரம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.